ஒக்ரோபர் 13, 2020

**அன்பார்ந்த நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கு,**

கோவிட்-19 நோய்க்கு எதிராக லேக் றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு (Lakeridge Health) எடுத்து வரும் பிரயத்தனங்கள் பற்றிப் புதிய தகவல்களை நாம் உங்களுடன் பகிர்ந்து கொண்டு சிறிது காலமாகி விட்டது.

ஒப்பீட்டு அளவில் ஓரளவு ஸ்திரமாக இருந்த கோடை மற்றும் ஆரம்ப இலையுதிர் கால நாட்களின் பின்னர், டூறாம் பிரதேசத்திலும் ஒன்ராறியோ மாகாணத்திலும் கோவிட்-19 வளரும் வேகம் அதிகரித்து வருகிறது. லேக்றிட் ஆரோக்கிய வைத்திய சாலைகளிலும், அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை உயருவதை நாம் இங்கு கவனிக்க ஆரம்பித்து இருக்கிறோம்.

இவ்வாறு அதிகரித்து வரும் நோய் பரவும் வேகவீதம் எமக்கு கரிசனை தருவதுடன், எமது ஆரோக்கிய சேவைத் திட்டம், எமது பொருளாதாரம் ஆகியவற்றை மட்டுமன்றி தனிப்பட்ட முறையில் எங்களையும் ஆபத்துக்கு உள்ளாக்குகின்றது. இது எங்கள் எல்லோரையும் விரைந்து செயற்படும் படி அழைக்கின்ற ஓர் அறைகூவலாக வந்துள்ளது. அடிப்படையான ஆரோக்கிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றும் விஷயத்தில் நாம் இரண்டாவது முறையாகத் தீவிர ஈடுபாடு காட்ட வேண்டிய நிலை உருவாகி உள்ளது. எமது சொந்தக் குடும்பத்தினரின் வட்டத்துக்கு வெளியே உடல்ரீதியாகத் தூர விலகி நின்று பழகுதல், முகக்கவசங்கள் அணிதல் மற்றும் அடிக்கடி நம் கைகளைக் கழுவுதல் ஆகிய செயல்கள் அவசியமாகின்றன.

இவ்வாறான அடிப்படைப் பாதுகாப்பு முறைகள், கோவிட்-19 நோய் பரவுதலைக் குறைக்கும் விடயத்தில் மிகுந்த பலனளிப்பவையாக இருப்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இவற்றால் எங்களையும் எமது குடும்பத்தினர் நண்பர்கள் மற்றும் எம்முடன் கூடிப் பணிபுரியும் தொழிலாளார்கள் ஆகியோரையும் பாதுகாக்க முடியும் என்பதும் உணரப்பட்டு விட்டது. நோய் பரவும் வேகத்தைக் குறைத்து, சமூகத்தில் நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பினை பின்னோக்கி நகர வைப்பதற்கு நாம் எல்லோருமாகச் சேர்ந்து ஆற்ற வேண்டிய விடயங்களில் மீண்டும் கூரிய கவனம் செலுத்துவது முக்கியமாக உள்ளது.

**லேக்றிட்ஜ் ஆரோக்கிய நிறுவனத்து வருகை தருதல்**

எமது நோயாளர்களையும் பணியாளர் குழுக்களையும் நாம் பாதுகாப்பாக வைத்திருப்பதை உறுதி செய்வதற்காக, எமது வைத்தியசாலைக்கு உள்ளே வரும் ஒவ்வொருவரையும் கோவிட்-19 நோய் அறிகுறிகள் அல்லது நோய் சுற்றாடலுக்கு

உட்பட்டமை போன்றவற்றுக்காகத் தொடர்ந்து பரிசீலனை செய்து வருகிறோம். **லேக்றிட்ஜ் ஆரோக்கிய நிறுவனத்தின் சேவை நிலையம் எதற்கு உள்ளேயும் வரும் ஒவ்வொரு நபரும், முகக் கவசம் அணிந்து இருக்க வேண்டும் என்பதை ஞாபகம் வைத்திருப்பது மிக அவசியம் ஆகும்.**

**லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள்**

வசந்த காலம் மற்றும் கோடை நாட்களில் நிகழ்ந்த, இந்தப் பெரும்புல நோயின் முதலாவது அலையின் பொழுது எமது சேவைகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டன என்றபோதிலும் நாங்கள் மிகக் கவனமாக எமது வைத்தியசாலை ஸ்தலங்களில் இச்சேவைகளை மீண்டும் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறோம். முடிந்த அளவு வேகத்துடன், பாதுகாப்பு நிலையையும் உறுதி செய்து கொண்டு இவ்வாறு செய்தோம். சத்திர சிகிச்சைகள் மற்றும் வெளிநோயாளர் சேவைகள் போன்ற மருத்துவ சேவைகளும் இதில் அடங்கி இருந்தன.

இந்த நோயின் இரண்டாம் அலையை எதிர்கொள்ள நாம் தயாராகும் இந்நிலையில், சில வைத்திய நடவடிக்கைகளைப் படிப்படியாக குறைப்பதற்கும் ஒரு திட்டத்தை வகுத்து வருகிறோம். வைத்திய சாலைகளின் உள்ளே நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்படும் ஒரு நிலை தோன்றினால், இவ்வாறான குறைப்புக்கான தேவை ஏற்படலாம். வைத்தியசாலைகளில் செய்யப்படும் சத்திர சிகிச்சை மற்றும் கோவிட்-19 தொடர்பிலான ஒழுங்கு விதிமுறைகள் பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு இங்கு சென்று பார்வையிடுங்கள்: this link.

**பிரதேசவாரியான எதிர்நடவடிக்கைகள்**

கடந்த செப்ரெம்பர் மாதம் இப்பிரதேசப் பாடசாலைகள், மாணவர்களை மீண்டும் திரும்பி வருவதற்கு அனுமதி அளித்தன. கல்வி பயிலும் சுற்றாடலுக்கு மாணவர்கள் பாதுகாப்பான ஒரு முறையில் திரும்பி வருவது தொடர்பில் மாகாண அரசு புதிதாக விதித்த வழிகாட்டும் நெறிமுறைகளைத் தொடர்ந்து, இவ்வாறு செய்யப்பட்டது. வகுப்பின் உள்ளே நிகழும் கல்வி புகட்டலுடன் தூரம் கடந்த முறையில் வழங்கப்படும் கல்வியையும் சேர்த்து நிகழ்த்தும் ஒரு முறையின் வழியாக, இக் கல்விக்கான சூழல் உருவாக்கப்பட்டது. லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பும் இப்பிரதேசத்தில் எம்மோடு சேர்ந்து இத்துறையில் பங்காளராகப் பணிபுரியும் நிறுவனங்களும் சேர்ந்து, டூறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களத்துக்கு வேண்டிய ஆதார உதவியை வழங்கி வருகிறோம். டூறாம் பிரதேசப் பாடசாலைகளில் திடீரென வெடிக்கும் உட்புற நோய் அதிகரிப்புகளை கட்டுப்படுத்தும் முயற்சியில் இத்திணைக்களம் முன்நின்று பணியாற்றுகிறது.

**கோவிட்-19 நோய்க்கான பரிசோதனை**

கடந்த சில வாரங்களாக கோவிட்-19 நோய்க்குரிய மருத்துவ பரிசோதனைக்கான தேவையும் இந்த மாகாணம் முழுவதிலும் பிரமிக்கும் விதத்தில் அதிகரித்து வந்துள்ளது. டூறாம் பிரதேசம் உட்பட இது நடந்துள்ளது. கோடைகால மாதங்கள் முழுவதிலும் 300 முதல் 400பேர் வரையில் தினசரி சோதனையை வேண்டிக் கொண்டனர். கடந்த வாரம் சோதனைக்கான வேண்டுதல்கள் நாளொன்றுக்கு 2300 என்ற அளவுக்கு உயர்ந்து நின்றது. இப்படியாகச் சோதனைக்கான வேண்டுதல்கள் அதிகரிக்கத் தொடங்கிய

பொழுது, ஒன்ராறியோ மாகாணம் அடங்கிலும் உள்ள கோவிட்-19 மதிப்பீட்டு நிலையங்களில் இந்நோயின் காரணத்தால் கூடிய ஆபத்தினை எதிர்நோக்கும் தனிநபர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சோதனைக்கான வழிகாட்டும் நடைமுறைகள் புதிதாக பிரயோகத்துக்கு வந்தன.

**கோவிட்-19 பரிசோதனைக்குத் தகைமை பெறும் மனிதர்கள் பின்வருவனவற்றில் ஒன்றினைக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும் :**

- கோவிட் -19 நோயுக்கான அறிகுறிகள் இருத்தல். கோவிட் -19 நோய் தொடர்பிலான அறிகுறிகளை அறிவதற்கு இந்த இணைப்புக்குச் சென்று பார்வையிடுங்கள்: this link;
- நீங்கள் இந்நோய் பரவும் சூழலுக்கு உட்பட்டு இருப்பதாக பொதுசன ஆரோக்கிய அமைப்பு (public health) வழியாக வரும் தகவல் அல்லது கோவிட்-19 அபாய எச்சரிக்கையாக வழங்கப்படும் APP அறிவித்தல் (COVID-19 Alert APP notification) உங்களுக்கு வந்துள்ளது. (தயவு செய்து, நீங்கள் ஏற்கெனவே இதனைச் செய்யவில்லை என்றால், Ontario.ca/covidalert என்ற இணையத் தளத்துக்குச் சென்று இந்த அறிவித்தலுக்கான செயலியை – App - தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்);
- நோய் சடுதியாகத் தோன்றிப் பரவிய ஓரிடத்தில் வேலை செய்கிறீர்கள் அல்லது வசித்து வருகிறீர்கள் என்ற நிலைமையில், நீங்கள் சோதனைக்கு உட்பட வேண்டும் என்று பொதுசன ஆரோக்கிய அமைப்பு உங்களுக்கு அறிவுறுத்தி உள்ளது;
- நீண்ட காலப் பராமரிப்பு இல்லம், ஓய்வுகால இல்லம், பொதுமக்கள் புகலிடம், குழுவாகத் தங்கும் இல்லம் அல்லது கூடிச் சேர்ந்து பராமரிப்பு பெறுகின்ற/வாழ்விடத்தை பகிர்ந்து கொள்ளுகின்ற ஒரு ஸ்தலத்தில் வேலை செய்கிறீர்கள் அல்லது சீவிக்கிறீர்கள்;
- ஆரோக்கிய அமைச்சு, நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சு அல்லது பொதுசன ஆரோக்கிய அமைப்பினால் (public health) சோதனைக்கு ஆளாக வேண்டும் என்று குறிப்பாகக் கூறப்பட்ட ஒரு குழு மக்களில் ஒருவராக இருக்கிறீர்கள்.

சோதனைக்கு உட்படுவதற்கான உங்கள் தகைமை பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு தயவு செய்து லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பின் தகவல் பக்கத்தை இங்கு சென்று பார்வையிடுங்கள்: COVID-19

**கோவிட்-19 நோயுக்கான சோதனை அத்துடன்/அல்லது மதிப்பீடு ஒன்றினைச் செய்வதற்கு உரிய சந்திப்பினை எவ்வாறு ஒழுங்கு செய்வது**

கோவிட்-19 நோயுக்கான ஒன்றினை அல்லது தேவைப்பட்டால் அந்நோய்க்கு உரிய மதிப்பீடு ஒன்றினை செய்யும் வாய்ப்பினைப் பெறுவதற்கு முதலில் covidswab.lh.ca என்ற இணையத் தளம் சென்று கணினி முறையிலான படிவம் ஒன்றினைப் பூர்த்தி செய்யுங்கள்.

உங்களுக்கு தரப்படும் சந்திப்பு பற்றிய அறிவுறுத்தல்கள் உங்களுக்கு தானாகவே மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும். உங்களிடம் கணினி ஒன்று அல்லது Wi-Fi இல்லை என்றால் உதவி பெறுவதற்கு 1-800-841-2729 என்ற தொலைபேசி இலக்கத்தில் DRHD(Durham Region Health Department) டுறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கான சந்திப்பு டுறாம் பகுதியில் அமைந்துள்ள கோவிட்-19 மதிப்பீட்டு நிலையங்கள் ஒன்றில் ஏற்பாடு செய்யப்படும். இந்நோயுடன் தொடர்பு பட்ட கடுமையான அறிகுறிகள் தென்படும் எவரும் எமது வைத்தியசாலைகளில் அமைந்துள்ள அவசரகால சிகிச்சைப் பிரிவு ஒன்றுக்குச் செல்ல வேண்டும் அல்லது 911தொலைபேசி இலக்கத்தை அழைக்க வேண்டும்

**சோதனை ஒன்றுக்காகப் பதிவு செய்த பின்பு, அதற்கான தேவை உங்களுக்கு அற்றுப் போகும் ஒரு நிலைமையில், நீங்கள் உங்கள் சந்திப்பினை நீக்கம் (cancel) செய்வது முக்கியம் ஆகும். இதனால் நாங்கள் அச்சந்திப்பு நேரத்தினை நோய் ஆபத்தில் உள்ள இன்னொருவருக்கு வழங்க முடியும்.**

**சோதனை செய்யும் மருந்தகங்கள்**

இப்பொழுது சில மருந்தகங்கள் (pharmacies) இந்த நோயுக்கான அறிகுறிகள் இல்லாத மக்களுக்கும், அவர்கள் இச்சோதனையை செய்ய விரும்பினால், கோவிட்-19 நோயுக்கான பரிசோதனையை செய்து உதவுகின்றன. சோதனைக்குரிய தகைமை பற்றிய தகவல், சோதனை ஒன்றினை பதிவு செய்யும் முறை மற்றும் உங்கள் வீட்டுக்குச் சமீபமாக உள்ள மருந்தகத்தின் இடம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு இங்கு சென்று பார்வையிடுங்கள்: Ontario.ca/covidtest

**பரிசோதனை முடிவுகள்**

சோதனைக்கு உட்படும் நபர்கள் பொதுவாக அதற்கான முடிவுகளை சோதனை நாளில் இருந்து 3 முதல் 5 நாட்களின் உள்ளாகப் பெறுகின்றனர். எனினும் இவ்வாறு காத்திருக்கும் கால இடை வேறுபடலாம். கூடிய காலம் இதற்கு எடுக்கப்படுவதும் உண்டு. இவ்வாறான ஒரு கால இடையின் பின்னரும் உங்களுடைய சோதனைக்கான முடிவுகளை Ontario.ca இணையத்தளத்தில் காண முடியவில்லை என்றால் 905- 721-4842 தொலைபேசி இலக்கத்தில் கோவிட்-19 மதிப்பீட்டு நிலைய சோதனை முடிவுகள் ஸ்தலத்தை அழைத்து விசாரிக்க முடியும். இவ்வாறான தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை தற்பொழுது கணிசமான அளவு அதிகரித்து உள்ள காரணத்தால், தயவுசெய்து பொறுமை காட்டுங்கள். சோதனை முடிவுகளுக்காக நீங்கள் காத்திருக்கும் சமயத்தில், இந்த நோய்க்குரிய வைரசுக் கிருமி மற்றவர்களுக்குப் பரவுவதை தடுப்பதற்காக பொதுசன ஆரோக்கிய அமைப்பு விபரித்து உள்ள சுய தனிமைப்படுத்தலுக்கான வழிகாட்டும் முறைகள் self isolation guidelines யாவற்றையும் பின்பற்ற வேண்டியது மிகவும் முக்கியம் ஆகும்.

உலகளாவிய இந்த பெரும்புல நோயுடன் (pandemic) தொடர்ந்து நாம் போராடிக் கொண்டு இருக்கும் பொழுது, எமது சமூகத்தினருக்கு அது பற்றிய புதிய செய்திகளை

வழங்குவதில் நாம் உறுதியாக இருக்கிறோம். லேக்றிட்ஜ் ஆரோக்கிய நிறுவனத்தின் கோவிட்-19 COVID-19 தகவல் பக்கத்தை தயவுசெய்து தொடர்ந்து பார்வையிட்டு வாருங்கள். புதிய நடைமுறை வழிகாட்டல்களும் புதுப்பித்த தகவல்களும் எமக்குக் கிடைக்கும் போதெல்லாம் அவற்றை தொடர்ந்து உங்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளுவோம்.

முன் அறிமுகம் இல்லாத இந்த அனுபவக் காலத்தின் ஊடாக நாம் வழிகண்டு முன்செல்லும் நேரத்தில், நீங்கள் காட்டும் தளராக ஆதரவு மற்றும் பரிவுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

தயவு செய்து பாதுகாப்பாகவும் ஆரோக்கியத்துடனும் இருந்து கொள்ளுங்கள்.

சூசன் டிறிக்
இடைக்காலத் தலைவர் மற்றும்
பிரதம நிர்வாக அதிகாரி

கலாநிதி ரோனி ஸ்ரோன்
பணியாளர் குழுத் தலைவர்

Susan deRyk
Interim President and CEO

Dr. Tony Stone
Chief of Staff